# வலயக்கல்வி அலுவலகம்
## கிளிநொச்சி
### விவசாய விஞ்ஞான மாதிரி வினாத்தாள்- 02
### க.பொ.த உயர்தரம்(2020) நேரம் - 02 மணி

**பல்தேர்வு வினாக்கள்**

1. ஆவியுயிர்ப்பினால் தாவரத்திற்கு கிடைக்கும் உதவி
   1) தாவரத்தை குளிர்மையாக வைத்திருக்கும்
   2) வாயுக்களைப் பரிமாறும்
   3) ஒளித்தொகுப்பை அதிகரிக்கும்
   4) தாவர போசனைப்பொருட்களை அகத்துறிஞ்சும்
   5) வீக்க அமுகத்தை பேணும்

2. தாவரங்களின் ஒளிக்காலத் தூண்டற்பேறு பற்றிய கூற்றுக்கள் சில வருமாறு.
   A. தாவரங்களில் பூக்கள் உருவாதல், செந்நிற ஒளியை அகத்துறிஞ்சும் பைற்றோக்குறோம் மூலமாக தூண்டப்படும்.
   B. தாவரங்களில் பூக்கள் உருவாதலை தூண்டுவதற்கென புளோரஜின் எனும் நொதியம் தேவையாகும்.
   C. தாவரங்களில் பூக்கள் உருவாதலை செயற்கையாக தூண்டுதல் ஒளிற்கால தூண்டற்பேறாகும்.

   **மேற்படி கூற்றுக்களுள் உண்மையாணது/உண்மையானவை**

   1) A மட்டும்
   2) B மட்டும்
   3) C மட்டும்
   4) A,B ஆகியன மட்டும்
   5) A,C ஆகியன மட்டும்

3. ஒளித்தொகுப்பிற்கு அவசியமாகும் கட்புலனாகும் நிறம்
   1) கருநீலம்
   2) நீலம்
   3) பச்சை
   4) மஞ்சள்
   5) ஊதாவாகும்
4. விவசாயச்சூழலியல் வலய வகைப்படுத்தல் தொடர்பான உண்மையான கூற்று எது?
   1) நவீன வகைப் படுத்தலுக்கமைய 48 விவசாய சூழலியல் வலயங்கள் உள்ளன
   2) எல்லா விவசாய சூழலியல் வலயங்களும் இரண்டு ஆங்கில பேரெழுத்துக்களினால் வகைக் குறிக்கப்படும்
   3) விவசாய சூழலியல் வலய வகைக்குறிப்பில் ஆங்கில இலக்கத்தின் மூலம் மழைவீழ்ச்சிப் பரம்பல் காட்டப்படும்
   4) விவசாய சூழலியல் வகைக்குறிப்பில் ஆங்கில எழுத்துமூலம் வெப்பநிலை குறித்துக்காட்டப்படும்
   5) அதிக எண்ணிக்கையான விவசாய சூழலியல் வலயங்கள் உலர் வலயத்தில் உள்ளன
5. குறும்பகற்தாவரங்கள், ஒளிநடுநிலைத்தாவரங்கள், நெடும்பகற்தாவரங்கள் இவற்றுக்கு உதாரணமாக அமைபவை?
   1) கோப்பி, போஞ்சி, பசளை
   2) ஆமணக்கு, மிளகாய், கெக்கரி
   3) ஸ்ரோபரி, துவரை, கெக்கரி
   4) பீர்க்கு, கோப்பி, மிளகாய்
   5) தேயிலை, பீற்றூட், தென்னை

6. நாளொன்றுக்கு இரு தடவை மட்டும் வாசிப்புக்களைப் பதிவு செய்ய பயன்படும் கருவிகள் எது?
   1) மழைமானி
   2) மண் வெப்பமானி
   3) அசையாக்கிணறும் கொழுக்கி கணிச்சியும், காற்று வேகமானி
   4) அனிலமானி, வெப்பமானி
   5) மண்வெப்பமானி, ஈர-உலர் குமிழ் வெப்பமானி
   6) சூரிய ஒளிர்வுமானி, ஈர உலர் குமிழ் வெப்பமானி

7. இடை வெப்ப ஒருங்கு வலயம் தீவின் வடக்கிற்கு நகரும் காலம்
    1) முதலாம்இடைப்பருவப்பெயர்ச்சி காலம்
    2) இரண்டாம் இடைப்பருவப்பெயர்ச்சி காலம்
    3) தென்மேல் பருவப்பெயர்ச்சிக்காலம்
    4) வடகீழ்பருவப் பெயர்ச்சிக் காலம்
    5) எல்லா மழைக்காலம்

8. மத்திய நாட்டு ஈரவலயத்தில் அமைந்துள்ள பண்ணையென்றின் சராசரி ஆண்டு மழைவீஸ்ச்சி 3300mm இலும் அதிகமாகும் இந்த பண்ணை அடங்கும் விவசாயச் சூழலியல் வலயம்.
    1) ILIc
    2) IM2b
    3) WLIa
    4) Wu2b
    5) WMIa

9. குறித்த ஒரு வெப்பநிலையில் வளியில் உள்ள நீராவியின் உண்மை அளவிற்கும் அதே வெப்பநிலையில் அதே வளியில் உச்ச அளவில் இருக்க கூடிய நீராவியின் அளவுக்கும் உள்ள விகிதம் கணிப்பிடப்பட்டு அதன் சதவீதமாக காணப்படுவது.
    1) தன்ஈரப்பதன்
    2) சாரீரப்பதன்
    3) தனிஈரப்பதன்
    4) உணர்த்தகு வெப்பநிலை
    5) பனிபடு வெப்பநிலை

10. உயர் அமுக்கத் தொகுதிகளும் தாழ் அமுக்கத் தொகுதிகளும் வழமையாக இணைந்திருப்பது முறையே
    1) ''தெளிவான'' மற்றும் புயல் காலநிலையுடன் ஆகும்.
    2) ''புயல்'' மற்றும் தெளிவான காலநிலையுடன் ஆகும்.
    3) காற்று மற்றும் மந்தார காலநிலையுடன் ஆகும்.
    4) மந்தார மற்றும் காற்று காலநிலையுடன் ஆகும்.
    5) ''மழை'' மற்றும் உலர் காலநிலையுடன் ஆகும்.

11. ஒளித்தொகுப்பற்கு அவசியமான வெப்பநிலை வீச்சு பின்வருவன வற்றுள் எது?
    1) $30^{o}c$ - $40^{o}c$
    2) $15^{o}c$ - $25^{o}c$
    3) $25^{o}c$ - $35^{o}c$
    4) $35^{o}c$ - $40^{o}c$
    5) $12^{o}c$ - $20^{o}c$

12. வானிலைத்தரவுகள் பெறப்படும் நியம நேரமாக அமைவது
    1) 08.30 - 15.30
    2) 08.00 - 14.00
    3) 08.30 - 16.30
    4) 08.00 - 15.00
    5) 08.30 - 16.00

13. மழை வீழ்ச்சியின் செறிவு 25mm ஐ விட அதிகமாயின் அம்மழைவீழ்ச்சி
    1) பலித மழைவீழ்ச்சி
    2) மேற்காவுகை மழை
    3) அயன மழைவீழ்ச்சி
    4) அரிப்பு மழைவீழ்ச்சி
    5) சூறாவளி மழைவீழ்ச்சி

14. இலங்கையின் விவசாய காலநிலை வலயங்கள்
    1) 03
    2) 07
    3) 20
    4) 11
    5) 15

15. இலங்கையில் மழைவீழ்ச்சி தரவு பெறப்படும் நிலையங்கள்
    1) 381
    2) 646
    3) 788
    4) 650
    5) 380

16. தாழ்நாடடு ஈரவலயத்திற்கு பொருத்தமான நாற்றுமேடை வகை/வகைகள்
    1) உயர்நாற்றுமேடை
    2) மட்டநாற்றுமேடை
    3) தாழ்நாற்றுமேடை
    4) தாழ்நாற்றுமேடை,மட்டநாற்றுமேடை
    5) உயர்நாற்றுமேடை,மட்டநாற்றுமேடை

17. இலங்கையின் மழைவீழ்ச்சி பல தோற்றுவாய்களைக் கொண்டதாகும், இலங்கையின் வருடாந்த மழைவீழ்ச்சியின் பிரதான தோற்றுவாய்களாக அமைவன
    1) மேற்காவுகைமழை, மலையியல்மழை, படையாக்கமழை
    2) மலையியல்மழை, பருவப்பெயற்சிமழை, மேற்காவுகைக்குரியமழை
    3) பருவப்பெயற்சிமழை, மேற்காவுகைமழை, மலையியல்மழை
    4) படையாக்கமழை, மேற்காவுகைமழை, சூறாவளிமழை

5) பருவப்பெயற்சிமழை, மேற்காவுகைமழை, சூறாவளிமழை

18. ஒருபிரதேசத்தின் சூழல் ஈரலிப்பாக காணப்படவேண்டுமாக இருத்தல் அங்கு நிலவவேண்டிய ஈரலிப்பு வீதம் சராசரியாக
    1) 50% இலும் குறைவாக இருக்க வேண்டும்
    2) 50%ற்கும் - 25%ற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்
    3) 70%ற்கும் அதிகமாக இருத்தல் வேண்டும்
    4) 60%ற்கும் குறைவாக இருத்தல் வேண்டும்
    5) 10 - 14%மாக இருத்தல் வேண்டும்

19. 400m நிலப்பரப்பில் கிடைத்த மழைவீழ்ச்சியின் அளவு 25mm ஆகும், எனின் அந்த நிலத்தில் பெறப்பட்ட மழைநீரின் அளவை கனமீற்றரில் காட்டும் சரியான விடை
    1) 100m
    2) 1000m
    3) 10000m
    4) 12m
    5) 16m

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக**

ஒவ்வொரு வினாவிற்கும் விடப்பட்டுள்ள இடத்தில் விடைகளை எழுதுக, கொடுக்கப்பட்டுள்ள இடம் உமது விடைகளுக்கு போதுமானது என்பதையும் விரிவான விடைகள் அசியமன்று என்பதையும் கவனிக்க.

1) A. இலங்கை 46 விவசாயச்சூழலியல் வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது

i) இந்த வகைப்படுத்தலின் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக?

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

ii) பின்வரும் பிரதான காலநிலை வலயங்களில் அமைந்துள்ள விவசாயச் சூழலியல் வலயங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக?

(1) ஈரவலயம்..........................................................................................................

(2) இடைவலயம்......................................................................................................


(3) உலர்வலயம் ....................................................................................................

iii) கெரியோலிசு விசை என்பது யாது?

...............................................................................................................................................

...............................................................................................................................................

B. விவசாய வானிலை அவதான நிலையத்திலுள்ள கருவியின் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது




i) மேற்குறித்த கருவியை இணங்காண்க?

................................................................................................................................

ii) இங்கு A,B,C ஆகிய பாகங்களைப் பெயரிடுக?

A. ..................................................... B.........................................................

C.........................................................


iii) இங்கு காட்டப்பட்டுள்ள Aயின் முக்கியத்துவம் யாது?

.................................................................................................................................................

iv) X இன் உயரம் சென்றிமீற்றரில் எவ்வளவாகும்?

...........................................................................................................................

C.



i) மேற்படி வரைபுக்கமைய முதல் இரண்டு மணித்தியாலங்களிலும் பெறப்பட்ட மழைவீழ்ச்சியின் செறிவு எவ்வளவு?

....................................................................................................................................................

ii) அமனை மண்ணரிப்பை (erosive) ஏற்படுத்தக்கூடிய மழையாகக் கருதுவதற்கு இருக்க வேண்டிய இழிவுப்பெறுமானம் யாது?

...................................................................................................................................................

iii) மேற்குறித்தவாறு தரவுகளைக் குறித்துக்கொள்வதால் கிடைக்கும் அனுகூலங்கள் மூன்றை குறிப்பிடுக?


(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

(3) .......................................................................................................................

2)

A. சூழல் வெப்ப நிலைக்கும் ஒளித்தொகுப்பு வீதத்திற்கும் இடையிலான தொடர்பை பின்வரும் வரைபில் பருமட்டாக வரைக?



B. விவசாய வானிலை அலகினால் அளக்கப்படும் எவையேனும் சாராமாறிகள் 4 ஐயும் அதற்குறிய உபகரணங்களையும் தருக?

i) சாராமாறி அளவீட்டு உபகரணங்கள்

a. ............................................... ........................................................................
b. ............................................... .......................................................................
c................................................. ........................................................................
d. .............................................. .........................................................................

C. பயிர்ச்செய்கையின் போது வானிலைத்தரவு முக்கியத்துவம் பெறும் மூன்று விதங்களைக் குறிப்பிடுக?

a. ..........................................................................................................................................................
b. ..........................................................................................................................................................
c. ........................................................................................................................................................

## கட்டுரை வினா

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக?**

1. A) மண்வளியின் முக்கியத்துவத்தை விபரிக்க?

b) காலநிலை மாறுபாடு காரணமாக சூழல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றம் பயிரச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விபரிக்குக?

C) விவசாய வானிலை அலகில் உபகரணங்களை ஸ்தாபிக்கும் முறையை சுருக்கமாக விபரிக்குக?